# ஆதி மார்க்க னீதி மொழி

**February 2024**

***இதழ் 31 – பிப்ரவரி மாதம் 2024 வெளியீடு***
***© AMNA Trust, Chennai***



## மூலமந்திரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்னோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்திர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்த பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்த தேசிகேந்திரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

## மகாசங்ஙல்ப மந்திரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதிமார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே, பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஆசீர்பாதத்துடன் ஆதி மார்க்க னீதி மொழியின் 31 ஆவது இதழானது 13 அவை நிகழ்வு மற்றும் 2 இசை வகுப்பு நிகழ்வுடன் 2024 ஆம் வருட ஜனவரி மாத மின்னணு சஞ்ஞிகையாக மலர்ந்துள்ளது. இதில் காணும் வேதச் சொற்களின் விளக்கங்கள் யாவும் அவரவரின் அறிவுத் துலக்கத்திற்கும் புரிதலுக்கும் தக்கபடி என்றும் புதிதாகவே இருக்கக் கூடிய ஒன்றாகும்.

தை மாத சிறப்பாக பொங்கல் திருவிழாவும், அதன் சிறப்புக்கு சிறப்பு சேர்க்கும் விதமாக புதிய மக்களுக்கு காஷாயமும் வழங்கப் பெற்றது. சிதம்பரம் நடராஜப் பெருமானின் நடன ரகசியம் மற்றும் திருநள்ளாறு சனீஸ்வர பகவானின் ரகசியம், சனி நீராடு என்பதின் ரகசியம் அனைத்தும் மேற்படி சன்னிதி விஜயத்தின் போது உடன் வந்த மக்கள் அறிந்து மகிழ்ந்தனர். மூல மந்திரம், பாத பூஜை, மகா சங்கல்ப மந்திரம் இவற்றின் செயல்களை நன்மக்கள் உணர்ந்து உய்ய வேண்டும் என்பதே ஆதி மார்க்க நீதி அவையின் நோக்கமாக உள்ளது. நன் மக்களின் ஆதரவுடனும் ஒத்துழைப்புடனும் இச்செயல் மிக சிறப்புடன் நடை பெறுவதற்கான நிரந்தர இடமாக சரவண நந்தவனமும் பொலிவுடன் உருவாகி வருகிறது.

இந்த சஞ்சிகையில் வேத சாட்சியாக மக்கள் பகிர்கின்ற விஷயங்கள் யாவும் என்றும் புதியன என்பதனை னீதி எனும் பொருள் ஆன மக்களின்றி மாக்கள் ஒரு போதும் அறியார். நீதியை அறிந்த மக்களே நீதித்தீர்ப்பு நாள் எனும் உயிர்த்தெழுதலின் ரகசியத்தை அறிவர். இப்படியான வேத ரகசியங்கள் யாவும் வேத சாட்சியுடன் பொதிந்து வரும் இந்த சஞ்ஞிகையை அறிவைத் தேடும் நன் மக்கள் நிச்சயம் பார்த்துப் படித்து உணர்ந்து பயன் பெற எல்லாம் வல்ல பரிசுத்த ஆவி தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழிச்சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் பணிந்து வேண்டி வாழ்த்துகிறேன்.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai 

*சென்ற பத்து வருஷங்களில் னீ என்ன வேலை செய்திருக்கிறாய் என்றால், வீடு கட்டினேன் என்பாய்; எலியும் வீடுகட்டி யிருக்கிறதே என்றால், அதற்கு என்ன பதில் சொல்வாய்? இல்லை - னான் ஒரு கோயில் கட்டினேன் என்பாய். னீ உண்டாக்கிய கோயிலுக்கு முன் அந்நத் தெய்வம் எங்கிருந்நது என்றால் விழிப்பாய். ஆகவே, இதுவா உன் வேலை? மேற்கொண்டு கைலாயம் போவது னம்மால் முடியுமா? அது புண்ணியர்களுக்கு வாய்ப்பது என்கிறாய். அப்ப, உன்னையே னீ கையாலாகாதவன், பாபி என்று சொல்லிக் கொள்கிறாய். இறைவன் உன்னை அப்படிப் படைக்கவில்லை. அந்நச் சிரஞ்ஜீவி உலகுக்கு அரசனாக, ஈசனாக ஆகவே, னித்திய வலிமை யென்னும் அமானிதமாகிய வித்தியா தத்துவப் பொருளை வைத்து, னீ மனித தேகத்தில் படைக்கப்பெற்றாய். இதை னிரூபித்து உன்னை அப்படி ஆக்கவே னாம் வந்நிருக்கிறோம்.*

*அஹிம்சை என்பது னம்பிய தன்னுயிரைத் தற்கொலை செய்யாது னித்திய தேவ வாழ்க்கையைப் பெற்று வாழ்வதற்கு ஒரு தேவ ஆசானை அடைந்நு, தன்னுடைய அழிதேகத்தின் சேஷ்டைகளை எல்லாம் னீக்கிப் பஞ்சுமா பாதகங்களைத் தவிர்த்து னடப்பது - இன்னும் எல்லாப் பாவங்களையும் எல்லாக் கவலைகளையும் எல்லாத் துயரங்களையும் சர்வ சங்காரம் பண்ணக்கூடிய வேத குலாதீத எல்லைக்கு வழிகூடி னடப்பது.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

## 04-01-2024 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

மெய்வழி ஆண்டவர்கள் அருளிய **அரண்டிடும டத்தாருப தேசமத ழிம்பெனக் கண டக்கினியி லிட்டெடுத்த பின்...** எனும் ஞான முறையீடு ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
நமது சடங்கு சம்பிரதாயம் பாவங்கள் யாவும் அக்கினியில் இட்டு எரித்து மெய்வழி எனும் சரண கமல ஆலயத்தில் இரண்டற கலக்க வைத்து, ஆசான் தனது அருளால் நம்மை அறிவில் பிறக்க வைக்கும் பிறப்பே புது வருட பிறப்பு.

**எமன்படர் அடிபடு திருமெய்ஞ்ஞான கொரல்: திருவாக்கியம் 2ன் தொடர்ச்சி -** மனுவின் தூலமும் ஈசனுடைய சக்தியும் சேர்ந்து மனு-ஈசனாகி, மறலி கை தீண்டாமல் இருப்பதற்கான ரகசியத்தை அருளும் இந்த திருவாக்கியம், உயிர் பூரிக்கும் வலச்செவி சுவை உணர்ந்து மனுவாகி தன் அகரப்பொருளை கைகொண்ட தேவனுக்கே புரியும். நீதி எனும் பொருளான அறிவு மாணிக்கத்தை அறிந்து எமபயத்தை கடப்பதே வாழ்வாகும். பிறப்பெனும் பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை வெல்லும் அறிவுக்கான பயணமே மெய்வழி.

**குருமுறாதி:** அசையாத பாதமாக மூலவரும், ஆடும் பாதமாக உற்சவரும் உள்ள ரகசியமே கோவில்களில் உள்ளது. சன்மார்க்கம் எனும் சாவின் ரகசியம் தெரிந்து சாகாதவனே சன்மார்க்கி என வள்ளல்பிரான் அருள்கிறார். *ஆட்டி வெந்து சாம்பலாய் போன வித்து அப்புறமும் முளைத்துக் கனியருந்துவது* என்பது குருவருளால் நரனுள் சிறைப்பட்டிருந்த மனிதன் மறுபிறப்பு பிறப்பதாகும். சகல ரகசியமும் துலங்க வைக்கும் பாதம் அறிந்தவர்க்கே வேதம் விளங்கும். ஐம்புல நுகர்வின் காரணத்தை அறியவைக்கும் அறிவே பாத ரகசியமாக உள்ளது. **மின்னிய னன்னாத விந்து அன்னையின் கருக்குழியில் மன்னிய சுரோணிதத்துடன், எண்ணம் ஓடிப் பாயும் போது வன்னி தண்ணி காற்றுடனே காணும் மண் ஆகாய மெண்ணமே** என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள நமது பிறப்பின் ரகசியத்தை அறிவிப்பதே ஆடும்பாதம். மேய்ப்பரின்றி வெறித்துத் திரியும் நம் மனதின் வெறியை அடக்கி மேய்க்கும் ஆசான் அருளால், ஐம்புல கதவை அடைக்கும் பேரறிவின் மூலமே நம் நாமத்திற்குரிய பொருளை அறிய முடியும்.

மானுடர் ஆக்கையின் வடிவு சிவலிங்கம், சிதம்பரம், சதாசிவம், திருக்கூத்து என திருமூலர்பிரான் அருள்வது நான்கு தேக ரகசியங்களை குறிப்பதாகும். ஞான மாமேதை தற்கலை பீர்முகம்மது ஒலியுல்லா அப்பா அருளியுள்ள எட்டு வகை மக்காம்களும் செயலாக இருப்பதை ஆசான் அருளால் அறியலாம். மனமே அகத்தில் திரும்பி உள்ளமாகவும், புறத்தில் திரும்பி பேயாகவும் இருக்கிறது. ஆண்டவர்கள் அருளியுள்ள தவநிலை ரகசியங்கள் யாவும் ஒழுக்கத்தின் மூலமே கைவரவாகும். நாட்கள் வரும் நாளெலாம் நலனாள் ஆவதற்கும் பிறவாமை பெறுவதற்கும் குருபிரான் அருள்கின்ற எமனை மயக்கும் மையை கைக்கொள்வது எல்லோர்க்கும் அவசியமாகும். ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றது.

*குருவின் ஆஸ்ரமத்தில் உல்லாசமாக உலாவுதல், கால் னீட்டி உட்காருதல், பிரபுத்துவமான காரியங்ஙளைச் செய்தலாகாது. குருவின் ஆணையைத் தானே செய்யவேண்டுமே யல்லாது பிறரைக்கொண்டு செய்விக்கலாகாது.* ***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## 06-01-2024 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப்பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **ஆரணம் கடந்த பூரணக் கடலே...** என்ற குருமணிமாலை பாடலுடன் அவை இனிதே உதயமானது.

*ஜீவசகோதரர் சங்கர்:* ஆரணம் எனும் வேதம் கடந்த பூரண கடலாக வருபவர்களே குருபெருமான். ஓரிதழ் தாமரை இலங்கும் இடமாகிய செங்கமல பாற்கடலுள் பிரகாசித்து கொண்டிருக்கும் சிவக்கொழுந்தை, தன் பூரண ஒளி வாய் மூலம் அருளி, அன்பர்களின் உளத்தை குளிரச் செய்து, சின்முத்திரை மூலம் மதுமதி கடலுக்குள் மூழ்கச் செய்கிறார்கள்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர்: வாக்கியம் எண் 156:** நரகயோனியில் பிறந்து, நரன் என்ற நிலையில் இருந்த நம்மை, தேவயோனியில் பிறக்க வைத்த குருபெருமானின் அங்கங்களாகிய ஜீவசகோதரர்கள் தங்களுக்குள் பிரியமின்றி இருந்தால் மீண்டும் நரகயோனியில் புகுந்தவர்களாகி விடுவார்கள். ஆசானின் விருப்பு சொர்க்கம், வெறுப்பு நரகம் என்பதை உணர்ந்து, சமத்துவத்துடன் வாழ்வதே நன்மை பயக்கும்.

*ஜீவசகோதரர் குமார்:* **பரிசுத்த வேதாகமம் - பிலிப்பியர்: அதிகாரம் - 1**
**திருவசனம்: 21-** கர்த்தரை காட்டும் குருவேறு சிவன்வேறு அல்ல. **குருவே சிவனென கூறினன் னந்தி** என திருமூலர்பிரான் அருளியபடி, நம்மை சாவருமுன் சாகப்பழகி சாவை ஆதாயப்படுத்தி, ஜீவன் கண்ட சென்மசாபல்ய குலமாக்கி வைப்பவரே கிறிஸ்துவாகிய குருபிரான்.
**திருவசனம்: 22 -** அரிதிலும் அரிதாகிய மானிடப்பிறப்பு பெற்றும், மாயா சரீரமாகிய னித்திய தூலத்தின் உன்னதம் அறியாத பருவத்தில் இருந்த நம்மை மீட்டு, உடம்பிற்குள் இருக்கும் உறுபொருளை அறிவிப்பவரே கிறிஸ்து.
**திருவசனம்: 23 -** இக்கடத்தை நீக்கி அக்கடத்துள் ஆக்கும் செயலே **கர்த்தருக்குள் நித்திரை** என அருளப்பெற்றுள்ளது.
**திருவசனம்: 24 - நான்** எனும் ஜீவன், சரீரத்தில் தரித்திருப்பது அதிக அவசியம். ஏனெனில் உடலுள்ள போதே அழியாப் புகழுடம்பில் குடியேறி வாழ்வதே வாழ்க்கை என்பதை இத்திருவசனம் உணர்த்துகிறது.

*ஜீவசகோதரர் கோபிநாத்:* **ஸ்ரீமத் பகவத்கீதை - 18. மோக்ஷ ஸந்யாஸ யோகம்:** அந்தர்யாமியாகிய கிருஷ்ண பரமாத்மாவிடம், ஸந்யாஸம், தியாகம் பற்றிய தத்துவங்களை அர்ஜுனன் கேட்க; காம்ய கர்மங்களை துறத்தலே ஸந்யாஸம். வேள்வி, தானம், தவம் மூன்றும் செய்வதன் மூலமே கர்மபயனை துறக்க முடியும். மேலும், கர்மங்களின் சித்தியை பெறும் விஷயத்தில் உடல், இந்திரியங்கள், உபகரணங்கள், அவற்றின் செயல்கள் மற்றும் ஐந்தாவதாக தெய்வமும் காரணமாகும்.

**சாத்வீகம்:** தியான யோகத்தின் மூலம் மனிதன் தன் மனம், பிராணன், புலன்கள் இவற்றின் செயல்களை நிலை நிறுத்தும் உறுதியே சாத்வீகம்.
**ராஜஸம்:** மனிதன் மிகுந்த பற்றோடு அறம், பொருள், இன்பங்களை அடைவதில் இருக்கும் உறுதியே ராஜஸம்.
**தாமஸம்:** தீய புத்தியுடன் தூக்கம், அச்சம், கவலை, துயரம், செருக்கையும் விடாமல் பற்றும் உறுதியே தாமஸம்.

சாத்வீக குணமே பகவானைப் பற்றிய தெளிவான அறிவளித்து, கர்மத் தளைகளிலிருந்து முற்றும் விடுபட்ட பெருநிலையை அடைய வைக்கிறது. **ஸ்ரீ கிருஷ்ணரும் - காண்டீபமும் - அர்ஜுனனும் இருக்கும் இடமே குருக்ஷேத்திரம்.**
*ஜீவசகோதரி பானுமதி:* **திருக்குரான் - அத்தியாயம்: 9 - அத்தவ்பா (ஹிஜிரி 9-ம் ஆண்டில் மதீனாவில் அருளப்பெற்றது) திருவசனம்: 3 & 4** *இஸ்லாத்தை ஏற்க மறுக்கிற எந்த மனிதனும் சுவனம் புக மாட்டான்.* தன் ஜீவனை குறிக்கும் சொல்லாகிய இஸ்லாம் என்பதனை அறியாதவர் சுவர்க்கம் புக மாட்டார்கள். ஹஜ் யாத்திரை, காசி யாத்திரை என்பன பெரியோர்களின் கருணையால் உடல் கண்டு உயிர் வழி பற்றியோடி ஆத்ம வீடடைவது



Copyright © AMNA Trust, Chennai		

என்பதேயாம். புண்ணிய உருவாக வரும் ஆசானின் அருளால் பாவம் நீங்கி ஜீவாத்மா பரமாத்மாவோடு இணையும் இரகசியத்தை உணர்த்துவதே இத்திருவசனங்கள்.

சர்வ மதங்களும், வேதங்களும், ஆலயங்களும், ஆகமவிதிகளும் ஜீவனை குறித்தே பேசுகின்றன என குருபிரான் அருளியதைத் தொடர்ந்து ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவுற்றது.

## 11-01-2024 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

சாலை ஆண்டவர்கள் அருளிய **மாதவத்தின் றவனிலையி னிருப்பு மாகி மதியாகிப் பதியாகி...** எனும் **வாத கற்பம்** ஸ்தோத்திர பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
**திருமெய்ஞ்ஞான கொரல்: வாக்கியம் எண்- 02ன் தொடர்ச்சி:** ஜீவசிம்மாசனத்தில் அமர்ந்து ஆட்சி செய்யக்கூடிய பதத்தில் இருப்பவர்களே தெய்வம். னன்மை தரக்கூடிய ஒன்றாக, ஒவ்வொரு மனுத்தலையிலும் விளங்கிக் கொண்டிருக்கும் செயலுடைய தெய்வத்தை, ஓரறிவாக விளங்கும் அறிவுடையோரின் வாய்மை கொண்டே அறிய முடியும்.

**குருமுறாதி:** பெரியோர்கள் அறிந்த பேரின்ப நிலையே **கொழு முனையாம் கதிர்முனையில் ஆடும் பாதம்.** பதினாறு நிலைகளாக இருக்கும் பாதநிலை அறிந்தவர்க்கே வேதம் விளங்கும் என்பது பெரியோர்கள் வாக்கு. எண்ணுகின்ற எண்ணங்கள் யாவும் நல்எண்ணமாக இருக்கவே கோயில்கள் உண்டாக்கப் பெற்றுள்ளன. பிறப்பறுக்கும் செயலாகிய மரணமிலாப் பெருவாழ்வை அருளும் பெரியோர்களே விண்ணோர். மனிதன் முக்குணமற்று நிர்க்குணமான இறைநிலை பெற அருளப்பெற்றதே பகவத்கீதை. எட்டாத நிலைகள் யாவும் கொண்டவரே இறைவனாகிய எண்குணத்தான். பஞ்சு பூதங்களையும் கடந்த ஒன்றாக இருப்பதே சாகாத்தலை, வேகாக்கால், போகாப்புனல். நமது கீழ்னோக்கமான தலைவிதி எழுத்தை மேல்னோக்கமாக மாற்ற, பெரியோர்கள் அருள்வதே முரீது. இல்லறம், கிரகஸ்தன், சன்யாசம், பிரம்மச்சாரி, வானபிரஸ்தன், துறவறம், அறம், சமத்துவம் எனும் எட்டு நிலைகளும் கைக்காட்டும் மெய்க்குருவின் அருளாலும் அவர்களின் அன்பெனும் விசேஷத்தாலும் தன்னில் அறிந்தவர்களே சர்வமும் தான் என்ற நிலையை அறிய முடியும். ஊன்றிய பாதமான பரமாத்மா, ஆடும் பாதமான ஜீவாத்மா என்பதே இரு பாதநிலை. குருபாதம் வாக்கே போதம் என்பதே வேதம்.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* மெய்ஆசானே எண்ணற்று விரிந்த நம் எண்ணத்தை ஒரே எண்ணமாக ஆக்கி, பொய்யில் இருந்து கழற்றி மெய்யில் ஆக்கி வைக்கிறார்கள். நம்மை சுமக்கும் பாதத்தை அறிய அருள் செய்வது ஆசானின் பூம்பாதம். கண்டதே காட்சி கொண்டதே கோலமாக இருக்கும் நம் நழுகு மனத்தை, ஆசானின் ஓசை ஒலியெலாம் ஆன னாதமே காணாத காட்சியெலாம் காண அருள் செய்கிறது என்ற பகிர்வுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவுற்றது.

## 13-01-2024 ~ சனிக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்தஆவி தெய்வத்தின் திருவடி போற்றி **அண்டமும் அதிபா தாளம் அகிலமோ டமரர் மற்றும்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* ஆசான் திருவருளால், சிரசே அண்டமாகவும் நால்வகை யோனி எழுவகைத் தோற்றம் யாவும் குணங்களால் தோன்றும் பிறப்பென அறிந்து, மனிதனின் சுத்தத்துறை இருதயத்தில் பிரகாசரூபமாக வீற்றிருக்கும் இறைவனைக் கண்டு வணங்குவதே மெய்வணக்கம்.



Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரான் அருளமுதம்:**
**கோடாயிதக்கூர் திருவாக்கியம்: 157** மெய்க் குருபிரான், நரனிடம் ஞானம் பெற தடையாக உள்ள நழுகு மனதை 18 விதமான சாதுரியம் கொண்டு அறிவின்பால் திருப்பி மனுவாக்கி, பின்னர் தேவனிலைக்கு உயர்த்தும் செயலே பிரம்மவித்தை.

*ஜீவசகோதரர் குமார்:* **சத்திய வேதம்: தீமோத்தேயு: 1:8** சரீரமுயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது. தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத் தத்தம் உள்ளதால் நித்திய பிரயோஜனமுள்ளது. **யாக்கோபு 4:14,15**: *நாளைக்கு நடப்பதும் உங்கள் ஜீவன் பற்றியும் உங்களுக்கு தெரியாதே? ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால் இன்னின்னதைச் செய்வோம்.* கர்த்தராகிய குருபிரானின் வாக்குத் தத்தமான தேவஆவியால் மறுபிறப்புப் பெறும் போதே தேவபக்தி உண்டாகி, அனித்திய அற்ப சரீர முயற்சியை விட்டு, ஜீவன் கண்ட தேவகுலத்துக்கு உரியவனாக ஆகமுடியும். நாளை என்பது நமன் வரும் நாளாகவும், ஜீவியத்திற்கான நலநாளாகவும் உள்ளது. நம்மிடம் அறிவாக உயிராக உள்ள ஜீவனை அறிந்து எமபயமற்று வாழும் வாழ்வே சொர்க்க வாழ்வாகும்.

*ஜீவசகோதரர் சங்கர்:* சரிவை நோக்கி செல்லும் சரீரத்தில், பிரயோஜனம் உள்ள ஜீவனை பெரியோர்களின் திருவாக்கால் கண்டு நம் சொந்தமாக்கி, இருதயம் பரிசுத்தமாகி ஜென்ம சாபல்யம் பெற்று பேரின்ப வாழ்வு வாழ்வதே ஆண்டவரின் சித்தமாக உள்ளது.

*ஜீவசகோதரர் கோபிநாத்:* **பகவத்கீதை (இரத்தினச் சுருக்கம்)**

ஸ்ரீ வியாச பகவான் அருளால் தெய்வீகப் பார்வை எனும் அகக்கண் திறக்கப்பெற்ற ஸஞ்ஜயன் திருதராஷ்டிரர்க்கு எடுத்துரைத்த 18 யோக நிலைகளே பகவானின் ஒரு மொழி கீதையெனும் பகவத்கீதை.

1) **அர்ஜுன விஷாத யோகம்:** *குரு பகவானின் திருக்கரத்தில் உள்ள பாஞ்ஜசன்யம் எனும் ஞானச்சங்கின் தெய்வீக னாதமே அபயமளிக்கும் முதல் யோக நிலை.*
2) **ஸாங்கிய யோகம்:** *அதோ கதியிலிருந்த ஒருவனை நற்கதியில் ஆக்கி அருளும் ஆசானே அருட்கதி என அர்ஜுனன் சரணடைந்த யோகம்.*
3) **கர்ம யோகம்:** *ஜனகர் முதலான ஞானிகள் போல் பற்றின்றி கர்மங்களைச் செய்வதால் பரமாத்ம நிலை பெறமுடியும் என அருளும் யோகம்.*
4) **ஞான கர்ம ஸந்யாஸ யோகம்:** *ஆசான் அருளும் ஞானத்தீயில் கர்மங்களை எரித்து பற்றற்ற ஸந்யாஸ ஞானநிலையில் மனதை நிலை நிறுத்தும் செயலை அருளும் யோகம்.*
5) **கர்ம ஸந்யாஸ யோகம்:** *சுக துக்கத்தை சமமாக்கி, கர்மத்தின் பயனான செயல்களை மனதால் துறந்து, தாமரை இலை நீர் போல் உலகில் வாழும் வழியருளும் யோகம்.*
6) **ஆத்ம ஸம்யம யோகம்:** *குருவருளால், கோணாது முக்கோணம் போட்டதின் மேல் குரு சொன்ன ஆசனமிட்டு ஒண்டி ஒரு மனமாக ஸத்-சித்-ஆனந்த மயமான பரமாத்மாவில் நிலைத்து நின்று பேரானந்தம் பெற வழியருளும் யோகம்.*
7) **ஞான விஞ்ஞான யோகம்:** *எண்வகை அகரப் பொருளாலான உலகிற்கு* **நானே** *மூலகாரணம் என்றறிந்து தன்னை அறியும் தவமுறையில் நிலைத்து நின்று சாதிக்கும் யோகம்.*
8) **அக்ஷர ப்ரஹ்ம யோகம்:** *சரம் அவசரமாகும் மரணத்திலிருந்து மாறி சமரசமாகும் னிர்க்குணப் பிரம்மமான ஏகாட்சரமாகி மரணமிலாப் பெருவாழ்வு பெறும் யோகம்.*
9) **ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம்:** *ஜீவ குகையில் வீற்றிருக்கும் நித்திய பரம்பொருளான, நான் எனும் ஒளியான, அறிவெனும் ஜீவனை அறிய ராஜஅங்கத்தில் பழகும் பிரம்மவித்தையே ராஜாங்க யோகம்.*
10) **விபூதி யோகம்:** *நம் பாவம் தீர்க்கும் குருவின் தீயான பஞ்ஞாட்சர விபூதியே சர்வத்திலும் னின்றாடும் குஞ்சித பாதமாக மூவுலகிலும் நிரம்பி இருப்பதை அறிய வைக்கும் யோகம்.*
11) **விசுவரூப தரிசன யோகம்:** *ஊனக் கண்ணால் காண முடியாத, கோடி சூரியப்பிரகாசமான பகவானின் விஸ்வரூப தரிசனையை தெய்வீக அறிவுக்கண் கொண்டு காண வைக்கும் யோகம்.*



Copyright © AMNA Trust, Chennai

12) **பக்தி யோகம்:** *அந்தகரணம் விட்டு ஆசானிடம் அடைக்கலமாகி, அவர்களின் நினைவில் நீங்காது நிலைத்து மனம் அலைவற்று நிர்குணப் பிரம்மத்தில் னின்று சாதிப்பதே பக்தியோகம்.*

13) **க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ விபாக யோகம்:** *க்ஷேத்ரமான உடலில் நற்க்ஷேத்திரமான கங்குல் பகலற்ற இடத்தில் வீற்றிருக்கும் பரப்பிரம்ம க்ஷேத்திரக்ஞனை அறிய முற்படுபவனே பக்தன் என உணர்த்தும் யோகம்.*

14) **குணத்ரய விபாக யோகம்:** *முக்குணத்தால் வினையாகி, நபுசாகும் மனதின் பற்றறுத்து, னிர்க்குண சிபத்தெனும் அறிவாக மாற்றும் யோகம்.*

15) **புருஷோத்தம யோகம்:** *புலன்வழிப் பற்றி ஓடி, மனதால் விளையும் வினைப் பிறப்பறுக்க, அறிவால் ஐம்புலக் கதவை உட்தாளிட்ட உத்தமரே புருஷோத்தமர் என அருளும் யோகம்.*

16) **தைவாஸுர ஸம்பத் விபாக யோகம்:** *குருவருளால் சாஸ்திர அறிவு பெற்று, முக்குண மனநிலை நபுசான அசுரன் எனவும், னிர்க்குண அறிவு நிலை சிபத்தான தெய்வபதம் எனவும் அறிந்தவரே* ***பாழிலே மனதை விடாத பரமஞானி*** *என உணர்த்தும் யோகம்.*

17) **சிரத்தாத்ரய விபாக யோகம்:** *முக்குணம் சூழ்ந்து சிரத்தில் ஜீவித்திருக்கும் ஜீவன், ரஜோ, தாமச குணத்திலிருந்து மாறி, பற்றற்று சாத்வீக குணத்துடன் ஆனந்த மயமான பிரம்மானந்தத்தில் வாழும் உபாயத்தை அருளும் யோகம்.*

18) **மோக்ஷ ஸந்யாஸ யோகம்:** *வினைத் தலைவனான மனம், புலன், பொறி யாவும் ஆசான் அருளிய தியான யோகத்தால் நிலையாகி, இன்ப துன்பம் துறந்து ஸந்யாஸம் பெற்று பரமபத மோட்ச வீடடைய வழி கூறும் யோகம்.*

நம்பிக்கை, வைராக்கியம், ஒழுக்கம் எனும் மெய்ஞான அடிப்படை கைக்கொண்ட சாத்வீகரே பரமாத்மநிலை பெறுவர். ஆசான் திருவடி னிழலில் சரணாகதி அடைந்து பிறவாமை பெற்று பரமபதம் அடையும் செயலே பதியை எட்டும் 18 யோக னிலைகளாக அருளப்பெற்றுள்ளது.

**குருபிரான் அருளமுதம்:** அறிவுக்கும் அறியாமைக்கும் நடக்கும் யுத்தமே குருஷேத்திரப் போர். சகல உயிர் ஜீவனிலும் ஆடும்பாதமாக நின்று விளங்கும் ஜீவனை அறியும் தவநிலை ரகசியமே 18 யோக நிலைகளாக பகவானின் பாஞ்ஜசன்ய ஞானச்சங்கின் மூலம் அருளப்பெற்றுள்ளது. விஸ்வரூப தரிசனம், வேர்மேலும் தலைகீழுமான கற்பகத்தரு, தாய் யசோதைக்கு வாய் திறந்து ஆலம் காட்டிய ரகசியம் யாவும் குருபகவானின் ஒரு மொழி கீதையின் மூலமே அறிய முடியும்.

**குருமுறாதி:** ஜலம் சுண்டித் தவமெழும் செயல், குருவருளால் 12 வருடம் யோகனிலை பழகிட கைவரவாகும். நான்முக பிரம்மத்தின் அதிபதியாம் மெய்யான ஜீவனை நமது னேயமுள்ள பொருளாக்கி மகிழ்ச்சி பொங்கச் செய்வது ஆசானின் அருளமுதமே என்ற குருபிரானின் அருளுரையுடன் பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி, ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## 14-01-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிறப்பு அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

**குருபிரான் அருளமுதம்:**

ஐம்புலன் வழியாக இயங்கும் பிரகாசப் பொருளை அறிவதே தன்னையறிதல். தன்னை அறிதலே, மனம் அலையாமல் பாதுகாக்கும் செயல். மெய்குண்டம் எனும் மெய்வழிச் சாலையாகிய தன்பெருவெளியே பாவங்களை சங்காரம் செய்யும் இடமாகும். ஆசானின் அருள் அமுதத்தை பருகி, அறிவில் மேலோங்கி நிலைக்கும் செயலே இரண்டறக் கலத்தல். எண்ணங்களின் கூட்டாகிய மனதில் இருக்கும் சிவன் எனும் வாடாத தீபத்தை அறிந்தவர்களே கைலாய பிராப்திக்கு உரியவர்கள். ஆசான் அருளால் ஆறாவது அறிவை அறிந்து காலம் எனும் காலனை காலாதீதனாக மாற்றக் கூடிய வல்லபம் மனிதன் ஒருவனுக்கே உண்டு. பல கோடி



Copyright © AMNA Trust, Chennai 

எண்ணங்கள் உண்டாக்கும் பிறப்பை இறைவன்பால் வைக்கும் ஒரே எண்ணத்தால் தான் அறுக்க முடியும். மெய்மணம் கமழும் அறிவை அறிய வைத்து நம் மன அழுக்கினை தூய்மையாக்கும் துப்புரவாளராகிய ஒரு மெய்க் குருபிரானின் செயலே ஈடு இணையற்ற அறம். இதனையே **அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும், இழுக்கா இயன்றது அறம்** என திருக்குறளில் அருளப் பெற்றுள்ளது. உலக அனுபவத்தின் மூலம் நாம் பெற்ற பொய்யை எரிக்கும் நாளே போகிப் பண்டிகை. சூரியனான மனதின் ஓட்டம் கீழ் நோக்கின்றி வட-தென்திசை நோக்கி செல்வதே புண்ணிய காலம். வேர் மேலும் பணர் கீழுமாக விளங்கும் தெய்வீக மாமரத்தின் நடுவாக இருப்பவரே நாராயணன். ஒவ்வொரு மனுத் தலையிலும் இறைவன் இருந்து ஆட்சி செய்யும் இதய சிம்மாசனமே நீதியை நடவு செய்யும் இடம்.

ஜீவசகோதரர் சங்கர்: இறைவனால் மனிதனுக்கு வழங்கப்பெற்ற சீர் எனும் அமானிதத்தை ஆசான் அருளால் தான் அறிய இயலும். மனதுடன் மரணத்தை நோக்கி செல்லும் பிரயாணத்தை விட்டு, அறிவுடன் ஜீவன் இருக்கும் இடத்திற்கு சென்று வரும் செயலே ஜீவப்பிரயாணம். மாறிக்கொண்டே இருக்கும் நமது பொய் உடலில் மாறாமல் இருக்கும் மெய்யாகிய மெய்ப்பொருளை அறிந்து கோள்களின் பிடிகளை விலக்கி, மகிழ்ச்சி பொங்க வாழும் வாழ்வே மதி நிறைந்த பொங்கலாகும் என்ற பகிர்வுடனும், ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவுற்றது.

## 15-01-2024 ~ திங்கள்கிழமை
## கோளரி சாலையர் பொங்கல் திருவிழா~ வி.எஸ்.தோட்டம் ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா

பரிசுத்த ஆவித்தெய்வம் பிரம்மோதய மெய்வழிச் சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்துடன் குருபிரான் சாலை இரவி அப்பா அவர்கள் திருமுன்பாக அடுப்பும் சுற்றி கோலமுமிட்டு, கரும்பு கட்டி, மஞ்சள் காப்பு கட்டிய பானையில் சர்க்கரை பொங்கலிட்டு பானைப்பலி பாடலின் அருளமுத வர்ஷிப்புடன் பொங்கல் அமுதும் வழங்கப்பெற்றது.



**குருபிரான் அருளமுதம்:**

உத்திராயண காலத்தில் மகர ராசியில் சூரியன் பிரவேசிக்கும் தை முதல் நாளில் சூரியனுக்கு படைக்கும் பொங்கலே மகர சங்கராந்தி. சுடாத தீயாக, புகையாத கனலாக, வெற்றி தருகின்ற பூப்போன்ற தீயாக வரும் ஆசானின் வாய்மைக்குள் ஆகி, வினை தீர்த்து பிறப்பறுப்பதே மகர சங்கராந்தியின் தத்துவம். ஆசான் நம் இடருறும் இறுதி நாள் பேராபத்திலிருந்து மாற்றி தேற்றி ஏற்றி நம் முகத்தில் மகிழ்ச்சி பொங்கச் செய்வதே பொங்கல். நித்தம் பிரணவ வீட்டில் நுழைந்து அனுபவிக்கும் மகிழ்ச்சியே பொங்கல்.

கோளரி சாலையர் திருநாள் பாடலில் நாள் அதாக வரும் என்பது, பிரம்மவித்தை கைக்கொண்ட ஒருவரின் நாளாகிய காலம் அதுவாகவே வரும் என்பதாகும். நவக்கிரகங்களின் பிடியிலிருந்து ஆசான் நம்மை மாற்றி வைக்கும் நாளே கோளரி சாலையர் திருநாள். குருவருளால் தன் சொந்த தேகம் காணும் வகை அறிந்த ஒருவனுக்கே சனியின் பலன் பொங்கும் சனியாகிறது. ஆசான் அருளால் நன்னெறிப் புண்ணியம் கைக் கொண்டால் தசாபுத்திக்குக் காரணமான ராகு, கேது மற்றும் இதன் காரணமான சனியும் ஒழிந்து அமானிதச் சீராக மாறி வரம் தரும் வாயிலாக அமையும். சாலை ஆண்டவர்களின் திருக் குமாரராக, பிரம்ம பீடமாக,



Copyright © AMNA Trust, Chennai 

ஞான சூரியனாக வந்து அருளிய **அருள் தரும் திருப்பாடல்கள்** சாஸ்திர அறிவுடன் நம் அறிவில் தெளிவைத் தரும் அரும்பெரும் பொக்கிஷமாகும்.

கங்குல் பகலற்ற செங்கமலத் திருவின் செயலாகிய இரண்ய வத தத்துவ ரகசியத்தை உணர ஆண்டவர்கள் உண்டாக்கியதே **மாலை பானைப்பலி**. இரண்யனின் முக்குணம் அகற்றி நிர்க்குணனாய் ஆக்க, தூணாகிய உணர்வெனும் கம்பத்திலிருந்து வந்தவரே கம்பராஜனாகிய யோகநரசிம்மர். காலனற்ற காலங்கடந்த மேலாம்பரமான நாலாம் பாத வாழ்வே இரண்ய வத தத்துவம். அகர முதலாகிய முதற்பொருளே, மங்கையராகிய நம் மணாளனாகி மதிப்புக்கு உரியோராக நம்மை மாற்றுகிறது. தேகாலயத்தில் சந்திர சூரியனெனும் இவ்விரு கோலத்துள் வைத்தே, அசலான தீபம் சித்தத்தில் ஏற்றப் பெற்று மக்களாகிய பானையில், ஜீவத்தண்ணீராகிய தீர்த்தம் எனும் தேசிகர் வாசகம் ஊற்றிய பின்னரே அது பொங்குகிறது.

மெய்ஆசான், யாவரிடமும் உள்ள நேசமான பொருளை அன்னியமாக நினைப்பதை மாற்றி, மெய்நெறிக்குள் புகுத்தும் செயலே **நன்னெறி**. *ஆண்டவர்கள் அருளிய இளந்தளிர் மேனியர் என்னும் திருநாமம் கொண்ட இயேசுபிரான்,* வெல்ல முடியாத தன் புலனை வென்றதால்தான் **எல்ஷடாய்** எனும் சர்வ வல்லமையுள்ள தேவன் என்ற சிறப்பு நாமத்திற்கு உரியவரானார். சுவிசேஷ நற்செய்தியால் பொங்குவதே நன்னெறிப் பொங்கல். முக்கூருக்கத்தி கொண்டு பானைப் பலி செய்வது ஓரிதழ் தாமரையின் இரகசியமாக உள்ளது. அகம் சார்ந்த யாவற்றையும் உணர ஆண்டவர்கள் உண்டாக்கியதே கோளரி சாலையர் திருவிழா. னீதி வழி பற்றித் தாவித் தொடர்ந்திட ஆண்டவர்களின் அருளாசி வேண்டிப் பணிவோம் என குருபிரான் அருளியதைத் தொடர்ந்து, ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## 15-01-2024 ~ திங்கள்கிழமை ~ பொங்கல் சிறப்பு அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஆசீர்பாதத்துடன் ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர் சேர்க்கை நிகழ்வுகள் குருபிரான் திருமுன்பாக சிறப்புடன் நிறைவேறியது.

**குருபிரான் அருளமுதம்:**



மெய்க் குருவாக வருபவர்கள் தன் எண்ணத்தில் நம்மை சேர்ப்பதே அங்கத்தினர் சேர்க்கை. அவர்களின் எண்ணத்தில் நாம் தைக்கப்பெற்று அவர்களின் தயவால் மெய்யறிவு பெற்று இறைவனை அறிந்து, நம் மெய் அறிவில் பொங்கும் மகிழ்ச்சியே தைப்பொங்கல். நினைவெனும் ஆகாயத்தை ஊடுருவி நிற்கும் காரணதேகம் கொண்டே ஐம்புலன்களும் இயங்குகின்றன. வினையின் காரணமாக மனதில் விளையும் எண்ணமே அழியாப் பொருளை அறிவதற்கு தடையாக உள்ளது. செம்மையாகிய மனம் கொண்டே செம்பொருளைக் காண முடியும். ஃ எனும் பிரம்மத்து அருளொளி கொண்டே மனம் சைதன்யமாகும். பெரியோர்கள் நம்மை அங்கமாக்கிக் கொள்ளும் பேரானந்தம் சொல்லித் தொலையாத அப்புதுமை என்பது ஆண்டவர்கள் திருவாக்கு.

பசி, தாகம், சோர்வு, தூக்கம், பிணி, மூப்பு, சாக்காடு அணுகா பேரின்ப தேகம் அவரவருள் இருப்பதை அறிய வைத்து அதில் குடியேறி வாழும் உபாயம் அருள்வதே ஆதி மார்க்க னீதி அவை. சாமுன் சாகப் பழகும் சாகாக்கல்வியை பழகித் தேர்ந்த குருகுல அதிபரின் அருளால்



Copyright © AMNA Trust, Chennai 

அவரவரும் தன்னுள் விளங்கும் அஷ்டதிக்கு தலைவனை அறிவதே தன்னையறிதல். வேத சாட்சியாக ஞானிகள் அறிவிக்கும் சொல்லும் செயலுமே மகாமந்திரம். மெய்ஞான விருட்சத்தின் வித்தாக விளங்கும் **நாதம்** கொண்டே, மனிதனை பிரகாசிக்க செய்கின்ற மெய்யான ஒளியாகிய அழியாப் பொருளை அறிய முடியும். பிறவாமையை குறிக்கும் நகல் பொருளே உலகினோர் பூசும் விபூதி. அசல் விபூதியோ கங்காளனால் பூசப்பெறும் கவசத்திருநீறு மாறா மணம் கொண்டதாகும். பேரின்ப பெருவாழ்வு வாழ வழியருளும் வித்தில்லா வித்தின் ரகசியம் பொதியப்பெற்ற பொக்கிஷமே சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள அமுத கலைக்ஞான போதம் இரண்டாம் காண்டம் என குருபிரான் அருளியதைத் தொடர்ந்து ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றது.

## 18-01-2024 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ மதி. புன்னகை மகேஷ்குமார்

மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **செல்வச்சீர் னபியை அந்நர்மா முகமாய்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:** செல்வம் சீர் எனும் அமரத்துவமான சாவருமுன் சாகப்பழகும் நிலை பெற்று வருவோரே நபிகள். தீன் எனும் முகமது புள்ளிக்குள் ஆடும் ஜீவனின் அகமுக தரிசனையை ஆசான் அருளால் அறிந்தால் அறிவுத்தெளிவு பெறலாம். ஆண்டவர்கள் அருளிய அவரவரின் உயிராக விளங்கும் தீர்க்கதரிசனச் செயலானது, நிஜமான அறிவுத் தெளிவைப் பெற விழையும், நல்லுள்ளம் கொண்ட யாவருக்கும் கிட்டும் என்பது நிச்சயம்.

**திருமெய்ஞ்ஞான கொரல்: வாக்கியம் எண் 2ன் தொடர்ச்சி:** ஆடி அலைத்தாலும் அணுவும் சிதறாத மையாக, அவரவருள் இருந்து ஆட்டுவித்து கவ்வி பிடித்துக் காத்துக்கொண்டிருக்கும் அறிவே செயலுடைய தெய்வம். ஆசான் அருளால் செயல் இன்னதென அறிந்து இறை பொருளுடன் இரண்டறக் கலக்கும் நிலை பெறுவதே இன்சானின் இன்றியமையாத கடமை. நம்மைப் படைப்பு உண்டாக்கி கூடவே இருந்து பாதுகாக்கும் செயலுடைய ஆதியாகிய தெய்வத்தை திட்டவட்டமாக, தன்னில் அந்நர்முகமாக அறிய வைக்கும் ஆசானின் செயலே பிரம்மவித்தை. ஆண்டவர்கள் ஆசீர்பாதத்துடன் இன்று அப்படியான செயல் நிகழும் இடமாக விளங்குவதே ஆதி மார்க்க னீதி அவை.

**குருமுறாதி:** அகத்தில் விளைந்து விளைவேறி ஒளிரும் இறைவனின் திருவடி நிழலே அமானிதத்தின் ரகசியம். ஆசானின் அன்புக்கு பாத்திரமாக உள்ள கோத்திரர்க்கே திருவெனும் அட்சரத்தை அறிந்து வாழும் திருமண வாழ்க்கை கிட்டுகிறது. சுத்த சைதன்ய நாதராக வரும் ஆசானின் சொல் ஒரு பொருள் கொண்டு தொடரும் எதார்த்த உள்ளம் கொண்ட நன் மனத்தினரே நன்மை எனும் திரு மூலமணிப்பதியில் குடியேறி வாழ்வர். வள்ளல்பிரான் அருளிய சுத்தத் திருவடியையே, சாலை ஆண்டவர்கள் **இலஞ்ஞுழி சுழித்து ஏகமாய் விம்மி**ய சிவமயப் பொருளாக அருளியுள்ளார்கள். கடலறியா திரு வலம்புரிச் சங்கினை உணர்வெனும் கம்பத்தில் கொடியேற்றி ஊதும் விதத்தை **ஊதிடும், ஊதடா, ஊதுதே, ஊதூது, ஊதுமே** என ஐந்து நிலைகளாக ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். இதனையே தற்கலை மெய்ஞான சொரூபராகிய பீர்முகம்மது ஒலியுல்லா அப்பா அவர்கள், **அலிபு-லாம்-மீம்-ஹே-தால்** எனும் பஞ்சாட்சரமாக அருளியுள்ளார்கள். அணுக்கோடியிலும் நிறைந்த ஆதியனை சர்வமும் ஒடுங்கும் குஞ்ஞிதபாதத்தை அறிந்திட, குருபாதம் மறவாது வைக்கும் வேண்டுகோள் தியானமே குரு முறாதி. கலிமாவெனும் ஜீவனாகிய அகரப்பொருளை அறிவதற்காக படைக்கப் பெற்றவனே மனிதன். சொர்க்கமாக விளங்கும் குருவின் விருப்பத்திற்கு நாமும் ஒத்துப் பழகிவர, சொர்க்கபதிச் சந்ததியராய் வாழ்ந்து குரு மறையின் உளவு இரண்டிலை என்பதனை உணரலாம் என குருபிரான் அருளி, ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai

## 20-01-2024 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **பரவிரதாச் சாரியென்று மேசமயாச் சாரினான்...** என்ற ஐம்மணிப் பொதிகை பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
வரம்பில்லா மெய் ஞானத்தை பெற முன்னோர்கள் வகுத்த வரம்புகள் யாவும் ஆண்டவர்களின் பேரிரக்கத்தால் தகர்க்கப்பட்டு, யாவரும் இல்லற வாழ்வில் இருந்து கொண்டே வரம்பற்ற மெய்ஞானம் பெற அருள் பாலித்துள்ளார்கள்.

**கோடாயிதக்கூர்: வாக்கியம் - 158 & 159:** முப்பாழ் என்பது அறியாத மக்களுக்கு மரணமென்ற தலமாகவும், ஆசான் அருளால் மூன்றாவது கண் திறக்கப்பெற்று, ஆறாவது அறிவை அறிந்த மக்களுக்கு முப்பாலாகவும், அறிவிருக்கும் தலமாகவும் உள்ளது. குருபிரான் தங்களின் அருட் கடாட்சத்தால் பிரணவக் கலையை நம்மிடத்தில் பதித்து, நான்கு தேக இரகசியமும், மறைக்கு அப்பாலான மகோன்னத மந்திரங்களின் உற்பன தலத்தையும், அறுசுவை கொண்டொளித்த இடமும் அறிய வைத்து ஆரூரார் எனும் சௌபாக்கிய ஜெயசீலர்களாக ஆக்குகிறார்கள்.

*ஜீவசகோதரர் குமார்:* **பரிசுத்த வேதாகமம் - கொரிந்தியர் அதிகாரம் 1:14 - திருவசனம்: 37 தீர்க்கதரிசனம்:** பெரியோர்கள் தீர்க்கமாக கண்டு தரிசித்த தீர்க்கதரிசனமே சீருரை பாஷைகளாக தீர்க்கதரிசனமாக, பூமி புல் உள்ள நாளெல்லாம் வருகிறது. தீர்க்க தரிசனம் அவரவரின் உயிர் எனவும், சம்பவம் எனவும் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரி பானுமதி:* **திருக்குரான் - அத்தியாயம்:10 யூனுஸ் நபி:** இறை தூதர் யூனுஸ் நபி, ஹாரூன் வழி வந்தவர். தந்தை மத்தா - தாய் பதூரா. இறை நம்பிக்கை கொண்டவர்கள் எப்போதும் காப்பாற்றப்பட்டு தாருல் சலாம் எனும் சுவனத்தில் புகுவர். இறை கட்டளை மீறியவர்கள் தண்டனைக்கு உள்ளாகி ஜஹன்னம் எனும் நரகிற்கு ஆளாவர். அல் கிதாபின் சத்திய அறிவுரைகள் அனைத்தும் மனிதர்களை அறிவுப் பிறப்பில் ஏற்றவே அருளப்பெற்றுள்ளது. ஆண்டவர்கள் வேத முடியாகிய அலிபு-லாம்-மீம் என்பதின் இரகசியத்தை முப்பொருள் கோல விளக்கமாக ஆதி மான்மியத்தில் அருளியுள்ளார்கள். ஆசானின் இரக்கத்தால் சாந்தி எனும் சலாமத்தை இவ்வுடலுள்ள போதே அடைய வேண்டும் என்றே அல் குரானிலும் அருளப்பெற்றுள்ளது.

**குருபிரான் அருளமுதம்: குரு முறாதி:** வரங்கள் அருளும் வரோதயராம் குருபரனின் திரு ஆலவாய் சூலிலிருந்து பிறந்த அருமறையின் உளவானது ஒன்றே ஒன்று தான். ஜலத்தினில் அக்னி உருவாகவும், வெண்டரள வாசி, சிவமயப் பொருள், னற்றாள், பேசரிய பாதம் என மூவுலகிலும் ஊடுருவி நிற்கும் திருப்பாதமான ஜீவனின் இரகசியமும், முச்சுடர் நிலையும் தன்னுள் அறிந்து அடைவதற்கான உபாயமானது ஆசான் தயவால் மட்டுமே பெறக்கூடிய அரும்பெரும் நிலையாகும் என்ற ஆசானின் அருளமுதுடனும், ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவுற்றது.

*குருவின் வாக்கியம் தன் அறிவிற்கு னன்மையாகத் தோன்றினாலும், தீமையாகத் தோன்றினாலும் அதனை மீறி னடக்கலாகாது. இரவும் பகலும் அவரது ஆணையைச் செய்துகொண்டு, அடிமையைப் போலக் குரவனிடத்தில் வசிக்கவேண்டும்.* ***~ குரு கீதை***


Copyright © AMNA Trust, Chennai

## 21-01-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **பண்டைனான் மறை பேசும்பரிசையன்...** என்ற சேவடிச் சேகரம் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* பரிசாக வரும் குருபிரானின் நாத தொனியே நம் பிறவிப்பிணி தீர்க்கும் மருந்து. வந்த வேதங்கள் யாவும் ஜீவனுக்கான பரிசாக பெரியோர்கள் அருளியதே. ஒரு மெய் குருபிரான் மனித வடிவெடுத்து வரும்போதே வேதம் உயிர் பெறுகிறது. ஐயறிவு நுகர்ச்சியில் உழன்று கிடக்கும் மானிட தோற்றத்தில் இருக்கும் நரனை தன் இரக்கத்தால் ஆறாம் அறிவு இன்னதென அறிவித்து, மனு என்ற பதத்திற்கு ஆக்கி வைப்பவரே நித்தியரான குருபிரான். ஆதி புள்ளியின் ரகசியமான மூல மந்திரத்தை தேடாதவனும், வாயால் சொல்பவனும், பிரகாசமாக கண்டவனும் நரன்-மனு-தேவன் என்ற பதத்தில் உள்ளனர். அவரவரின் உடமைப் பொருளான ஆவியான பிராணன் எனும் உயிரை அறிந்தவனே அறிவு வடிவினன்.

*ஜீவசகோதரர் யுவராஜ்:* எதார்த்த நன்மனத்துடன் ஆசான் வாய்மையால் அறிந்து வணங்குவதே மெய்யான வணக்கம். ஆசானின் திருவாக்காகிய மெய்யறிவு கொண்டு பொய்யுலகப் பற்றை விட்டு பற்றற்றான் பற்றைப் பற்றி வாழ்வதே எமபயத்தைக் கடந்த வாழ்வாகும்.

*ஜீவசகோதரர் பார்த்திபன்:* குருவின் அருள்பெற்ற நாம் குருவாகிய சிவன் என்னும் அறிவு வழியில் பிறழாது நடக்க வேண்டும். நமது வயது வாழ் நாளாகிய காலத்தை வீணாக்காமல் வேத வழிப்படி வைராக்கிய சித்தமுடன் வாழ, குருவின் ஆசீர்பாதத்தை நித்தம் வேண்டுவோம் என்ற பகிர்வுடனும், ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவுற்றது.

## 25-01-2024 ~ வியாழக்கிழமை ~ தைப்பூசம் சிறப்பு அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்



பிரம்மோதய மெய்வழிச் சாலை ஆண்டவர்கள் அருளிய **ஓதுமறை வேத னெறி உண்மையாய் ஒழுகிவளர்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே மலர்ந்தன.

**குருபிரான் அருளமுதம்:** **ஏறு மயிலேறி விளையாடும் முகமொன்று...** என்ற திருப்புகழ் பாடலில் *ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும் ஆதி அருளால் வேண்டும்* என வேண்டுகிறார்கள்.

உடல் கடந்து அப்பாலுள்ள எண்ண வொண்ணா மெய்ப்பொருளாம் ஜீவனின் ரகசியத்தை எட்டு, ஆறு, ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று என ஞானிகள் அருள்கிறார்கள். நாளினுள் அமைந்த இறைவனின் சிறப்பை உணர்த்தவே வளர்பிறை, பௌர்ணமி, அமாவாசை ஆகிய தினங்களில் திதிப்படி பூஜை புனஸ்காரம் ஆச்சார அனுஷ்டானம் யாவும் உள்ளன. ஆக்கமும் அழிவுமிலா ஜீவனைக் கண்டு ஜென்மசாபல்யம் பெற்றவனுக்கு பிறப்பில்லை. அகக்கண் கொண்டு காணும் விஸ்வரூப தரிசனை பூச நட்சத்திரத்தில் வரும் தை மாத பௌர்ணமியின் சிறப்பு. சிரகிரி எனும் அறிவிருக்கும் தலத்தை அறிவிக்கும் ஆசானே



Copyright © AMNA Trust, Chennai 

மந்திரகிரி. தங்களின் அருள் னா கொண்டு அசைவற்ற அசலம் போல் நம்மை ஆக்கி வைக்கும் அவரே அருணாசலம்.

சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து, மேலான தௌலத்தாகிய உயிரின் ரகசியத்தை அறிந்த நாளே தைப்பூசத்தின் சிறப்பாகும். சர்வ படைப்பும் படைத்த, நாளினுள் இருக்கும், ராசி, நட்சத்திரம் கோள்கள் இவற்றின் அகமிய ரகசியமறிந்து அதனைச் சார்ந்து வாழ்வதே மெய்ஞ்ஞான வாழ்க்கை. மனமெனும் மாளிகையைப் படைத்த இறைவன், அறிந்தவனுக்கு சிவனாகவும், அறியாதவனுக்கு எமனாகவும் உள்ளான். கூத்தாடும் உயிரின் ரகசியம் வைத்து கட்டப்பெற்ற சிவலிங்கம் இல்லாத சிதம்பரம் நடராஜர் கோவிலின் தலைவன் தில்லையுள் கூத்தன், ஆடியவல்லான், திருச்சிற்றம்பலம், சபாநாயகம், சபாரத்தினம், கூத்தன் எனப் பல நாமங்கள் கொண்டவர். வெட்டவெளி ரகசியமும் முயலகனை மிதித்து ஆடும் சிவதாண்டவமும் இக்கோயிலின் சிறப்பாகும். ஓயாது படிக்க, ஓயாத நம் மனம் ஓய்ந்திட, ஓங்கும் உணர்வு.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* ஏறு மயிலேறி மனுஈசனிடம் குருபிரான் பேசுவதே ஞான மொழியாகும். மயிலாடும் துறையை தனதாக்கிக் கொண்டவர்களே அதன் மேலேறி அமர முடியும். புணர்ச்சியால் உயிரினம் தோன்றுவது போல், மெய்ஆசானின் திருப்பார்வையாகிய விழிப்புணர்ச்சியின் மூலம் விழிப்புணர்வை ஊட்டி, நம்மை மனுவாகப் பிறக்க வைக்கிறார்கள். ஆறுமுகமான பொருளின் துணையுடன் அருளும் வேலினை பெற்ற தினமே தைப்பூசம். நமது மனமெனும் கண்ணாடியை அஷ்டாங்க யோகத்தால் சுத்தம் செய்து, உடல் கடந்த உயிரின் ரகசியம் அருளி காலம் மூன்றும் காணச் செய்வதே உபதேசமாக உள்ளது.

**குருபிரான் அருளமுதம்:** சுருதி-யுக்தி-முயற்சி கொண்டு, எட்டமுடியாத மெய்ஞானம் பழகக்கூடிய ஒன்றாகும். சர்வ நாமங்களுக்கும் உரிய ஜீவனின் நகல் அடையாளமே காஷாயம். பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவருளால் மெய்யுணர்வு பெற்று வாழ்வாங்கு வாழ்வு வாழ்வோமாக என குருபிரான் அருளிச்செய்து ஸ்தோத்திரப் பாடலுடன் அவையை நிறைவு செய்தார்கள்.

*அவரால் விரும்பிக் கொடுக்கப்படாத குருவின் திரவியத்தை ஒருபோதும் அனுபவிக்கலாகாது. கொடுத்ததை அடிமையைப் போல் கொள்ளவேண்டும். இதனால் உன் ஜீவன் ரக்ஷிக்கப்படுகின்றது.* ***~ குரு கீதை***

## 27-01-2024 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்தஆவி தெய்வத்தின் திருவடி போற்றி **ஜீவனே நீயாகும் அறிவும் நீயாம்...** என்ற சிவானந்த போதம் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* அறிவு வடிவான ஆசான் தன் திருநாவு கொண்டு உரைக்கும் திருவாய் மொழிக்கு நாம் இணங்கி நடக்கும்போது, மனம் அலைவற்று சிந்தையற்ற சிவவாழ்வை நாம் பெறலாம்.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண்-160:** எல்லாண்டு எல்லாண்டு என்பது அண்டம் அணுவாக, அணு அண்டமான ஜீவதேக ரகசியமாகும். நாம் இந்த உடல் கடந்து உயிர்வழி பற்றி ஆத்மவீடு அடையும் செயல் குறித்தே இத்திருவாக்கு அருளப்பெற்றுள்ளது.

*ஜீவசகோதரர் குமார்:* **சத்தியவேதம் - கொரிந்தியர் 11:22,23:** *கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடம் அன்பு கூறாதவன் சபிக்கப்பட்டவனாக இருக்கக்கடவன்; கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களுடனே கூட இருப்பதாக.*



Copyright © AMNA Trust, Chennai 

நிலைத்த இன்பத்திற்கு மூலமாக கர்த்தராகிய குருபிரானிடம் வைக்கும் நம்பிக்கை ஒரு குழந்தை தன் தாயிடம் வைப்பது போல் நன்மையும் ஆசீர்பாதமுமாக இருக்கிறது. தூல தேகபற்றை விட்டு, ஜீவன் மேல் வைக்கும் அன்பே அவரவர் சுத்தத்துறை இருதயத்தில் வீற்றிருக்கும் கர்த்தரின் கிருபையை பெறுவதற்கான வழி.

*ஜீவசகோதரர் சிரஞ்ஜீவி:* **திருவருட்பா - தைப்பூசம் சிறப்பு:** தைப்பூசம் பௌர்ணமி அன்று, வள்ளலார் ஜோதியில் கலந்த திருநாளாக கொண்டாடப்பெறுகிறது. அகமிய ரகசியத்தின் நகல் வழிபாடே வலம் – சூரியன், இடம் - சந்திரன், நடுவில் 7 திரைகள் நீக்கி நிலைக் கண்ணாடியில் காண்பது ஜோதி தரிசன வழிபாடாகும். பௌர்ணமி திதியில் வரும் நட்சத்திரங்களின் பெயர்களே மாதத்தின் பெயர்களாக இருப்பதையும், மாதங்கள், ராசிகள், நட்சத்திரங்கள், கிரகங்கள்யாவும் மனிதனின் அந்தகரண கூட்டத்தில் இருப்பதையும் அதன் தலைவனாகிய மனம் எனும் சூரியனை நவகிரகங்கள் சுற்றி வருவதையும், குருவின் அருளால்தான் அறிய முடியும். நட்சத்திரங்களின் பாத ரகசியமாக விளங்கும் அமானிதமும், ராசிகளின் சக்தியாக விளங்கும் ஜீவனின் ரகசியமும் குருவருளால் அறிந்து வாழ்ந்தால், நாட்கள் வரும் நாளெல்லாம் நல நாளாமே.

*ஜீவசகோதரர் ரியாஸ்:* **திருக்குர்ஆன் - அல் பகரா - வசனம் 1-5:** புனிதமிக்க ஜீவனின் ரகசியமே அல்பகரா. அல்லாவின் வேதமாகிய அலீப்-லாம்-மீம் எனும் அந்தகிதாபை அறிந்திட ஆசான் அருள் வேண்டும். அவர்களின் அருள்அமுதத்தை உண்டு ஓயாத் தொழுகையின் மூலம் இபுலீசாகிய மனதை வென்று, அறிவு தேகத்தில் குடியேறி வாழலாம். இறை அச்சம் உள்ள நம்பிக்கையாளர்களே எமன் அச்சம் இன்றி வாழ்வர்.

*ஜீவசகோதரர் சங்கர்:* கர்த்தாதி கர்த்தராகிய மெய் குருபிரான் நம் மேல் வைக்கும் அன்பே நம் உள்ளமாகிய மகா மகசூக்காகிய இருதயத்தை பிரகாசமாக்கி ஜீவன் கண்ட ஜென்ம சாபல்ய குலத்திற்கு உரியவர்களாக நம்மை ஆக்குகிறது. அறியாமை எனும் ஏழு மாயத் திரைகளை குருவருளால் அறிந்து விலக்கிட, அருட்ஜோதியான அறிவு வடிவம் பெறலாம். மெய்வழி ஆண்டவர்கள் அறிவின் நாமத்தையே 12 மாதங்களுக்கும் சூட்டியுள்ளார்கள். அறிவு வடிவாக விளங்கும் அருட்ஜோதியை அறிந்திட ஆசானின் சொல்லக விளக்காகிய ஜோதி வேண்டும். அல் எனும் அசைவற்ற பரம்பொருளை ஆசானின் பேரிரக்கத்தால் அறியும் போதே, நினைவெனும் ஆகாயத்தில் சொர்க்கலோகம் கட்ட முடியும். அழியாப்பதி குடியேறிய நாயகமாகிய குருவின் அருளால் தான் கூடிருக்க கைலாசம் காணலாம் என்ற பகிர்வுடனும், ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

## 28-01-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்

சாலை ஆண்டவர்கள் அருளிய **ஓதுமறை வேதநெறி உண்மையாய் ஒழுகிவளர்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரி சுமதி:* **மாற்றிப் பிறக்க வகையறிந்தாய் இல்லை** என பட்டினத்தார் அருளியது போல், மனதின் மூலமாக நமக்குள் நிகழும் ஆறு பிறப்பை நாம் அறியாமல் இருக்கிறோம். மனிதனிடம் உள்ள தனிச்சீதனமான ஆறாம் அறிவாகிய மனதை அறியாததால் ஆறாவது அறிவையும் நாம் அறியவில்லை. புலன் வழியாக புறத்தில் ஓடும் மனதை, ஆசான் அருளால் அகமுகமாக திருப்பி அறியாமை எனும் உறக்கம் விட்டு, அறிவு எனும் விழிப்பு பெற்று னீதி எனும் பொருள் ஆனவனே மறுபிறப்பு பெற்றவன். அறியாமை அழிவாகவும், அழியாமை அறிவாகவும் இருப்பதை ஆசான் அருளால் அறிவதே மறுபிறப்பு. இந்த அழியா **மை**யை சாலை ஆண்டவர்கள் இருதயம் எனும் சிமிழில் இருக்கும் கருமை எனவும் திருக்கலிமா **மை** எனவும் அருளியுள்ளார்கள்.

ஆசான் அருளால் இப்படியான மையை, ஆதியை, இம்மையில் அறிந்து அழிவுடல் விட்டு னித்திய உடலில் குடியேறி வாழ்வதே மறுபிறப்பு. குருவருளால் மனம் அடங்கக் கற்று அனித்ய தோற்றம் விட்டு, நித்திய தோற்றமற்ற ஒன்றாக நம் கடத்துள் விளங்கும் கடவுளெனும் ஜீவனாகிய உயிரை இதயலோகத்தில் நேருக்கு நேர் சந்தித்து வணங்குவதே தரிசனை.



Copyright © AMNA Trust, Chennai 

***வாசனை கேள்வி இருகண் வாயெவைக்கும் வல்லமை அளிக்கும் அக்கண்*** கொண்டு செல்வச் சீர் னபியை அந்தர்மா முகமாக காண்பதே தரிசனை. ஆசான் அருளால் அகத்தில் நாம் காணும் ஒரு திரு தரிசனை நம் இருவினையும், உள்ளக் கவலையும் போக்கி காலன் என்ற பயத்தையும் இல்லாமல் ஆக்கிடும்.

*ஜீவசகோதரி செஜிதா:* வினையே மனித குணநல பேதங்களுக்கு காரணம். சிலரின் விசேஷ குணங்களும் திறமையும் பூர்வ ஜென்ம வாசனையின் காரணமே. மனிதன் நல்வினை தீவினை இரண்டும் அகற்ற வேண்டும் என்கிறது **சுப்பிரமணியர் யோகஞானம்.** ஆலமர விதையினுள் பொதிந்துள்ள ஆலமரம் போல், சிற்றணு வடிவாக தோற்றமில்லாமை எனும் அரூப வடிவில் மனிதனுள் அவனது வாழ்நாள் பொதியப்பெற்றுள்ளது. ஒரு மெய் குருபிரானை அண்டி அவர்களின் தயவால் வினை நீக்கி, விடா முயற்சியுடன் வெற்றி தோல்விகளை சமமாக பாவித்து, மெய்வணக்கத்தில் னின்று சாதித்து, பிறவாமை பெற்று பெருவாழ்வு வாழ்வோமாக.

*ஜீவசகோதரி சருபா:* நம் புலன்வழி பற்றி வீணாகும் வயதை, மீட்டு, மாயை சூழ்ந்துள்ள மனதை, திருவடி பற்றச் செய்து இழைக்க இழைக்க ஜொலிக்கும் வைரம் போல் மெய்குருபிரான் அறிவாக மாற்றி பிரகாசிக்க செய்கிறார்கள். ஒரு மெய் குருபிரானை தரிசனை காண்பதும், அவர்களின் அருளமுதத்தை செவிமடுப்பதும், அதைப் பற்றி பேசுவதும், மெய் மணத்தை உணர்ந்து அதைப்பற்றி சிந்திப்பதுமே தன்னை அறிவதற்கான வழி. நம்முள் இருக்கும் அழியாத ரத்தின மாளிகையுள் சிற்றணு வடிவாக பொதிந்து சர்வத்தையும் அனுபவிக்கும் னித்தியப் பொருளை அறிவதே மனிதனின் கடமை. அறியாமையால் பற்றியிருக்கும் உலக வாழ்வையும், அதிலுள்ள பொய்யான யோகநிலைகளும் விட்டு, நம்மை சிவமாக்கும் குருவின் அன்பை பெற்று உய்வோமாக.

*ஜீவசகோதரர் சொர்ணமதி:* வாழ்க்கை என்பது நம் காலமாக, மனமாக உள்ளது. மனதை லயமாக்கி மூச்சை லயமாக்கும் வித்தையே பிரம்மவித்தை. இதனை தெரிந்து கொள்வது தகவலாகவும், பழகி செயலாக்குவது அறிவாகவும் உள்ளது. குருவருளால் நித்தம் மனமடங்கப் பழகும் செயலே மனதிடம் இருந்து அறிவைப் பாதுகாக்கும் வழியாகும். குருபிரான் சொல்லும் சொல்லை நமது வாழ்வாக ஆக்கிக் கொள்வதே மெய்யறிவை பெற்றதற்கான அடையாளம்.

*ஜீவசகோதரர் ரிஷி:* அறிவே ஞானத்தை அடைவதற்கான அடிப்படையாகும். ஒன்பது வாயில்கள் வழியாக வீணாகும் ஐம்புலன்களையும் ஒரே கதவால் அடைக்கும் செயலே பேரறிவாகிய பிரம்மவித்தை. இதுவரை நாம் கேட்டறியாத புழக்கத்தில் இல்லாத புதுமொழி கொண்டே உலகில் எது மெய், எது பொய் என அறிய இயலும். இருதயத்தை உண்டாக்கிய இருதயத்தை அறிந்து அனுபவிக்கும் ஒரே வழி ராஜபாதை. வேதத்தின் ரகசிய பூட்டை திறப்பதற்கு ஆசான் அருளும் பூட்டடங்கா சாவி வேண்டும். மெய் வணக்கத்தின் மூலம் கவனத்தில் மிக கவனமாக இருந்தால் நமது அகமிய ரகசியம் அத்தனையும் அறியலாம். உலக வாழ்வில் தாமரை இலை நீர் போல் வாழ்ந்து, காலனை வென்று, காலம் அற்ற இடத்தில் வாழ்வதே வாழ்வாகும்.

*ஜீவசகோதரர் சங்கர்:* அவரவர் உள்ளத்தில் நடுநாயகமாக உள்ள பிரகாச பொருளை அறிவிக்கும் பிரகாசப் பொருளே நடுநாயகமாகிய குருபிரான். கிடைத்தற்கரிய மெய்ஞானத்தின் உன்னதத்தை உணரும் போதே இதில் நிலைக்க முடியும். நாள்தோறும் புதியவனாகிய இறைவனும், மெய் குருபிரான் அருளும் வாய்மையும் ஒன்றே. வித்தில்லா வித்து விளையும் நல் விளைநிலமாக நம்மை ஆக்கி வைத்த குரு பெருமானைப் போற்றி குலம் தழைத்து வாழ்வோம்.

**குருபிரான் அருளமுதம்:** குரு பாரம்பரியத்தில் வருவோரே இறைவனை அறிய வைக்கும் அட்சரமான அலீபு-லாம்-மீம் என்பதை அறிய வைப்பார். ஏகாட்சர தீட்சை எனும் அஜபாவாகிய நடை எனும் உஜூதை காண, பொய்யும் மெய்யும் பிரித்துக் காட்டும் வந்த வேதமாகிய ஆசானின் தயவு வேண்டும். உலக காரியத்திற்காக இறைவனை வேண்டுவது பாவ காரியம். சபாநாயகமான இறைவன் தில்லையில் இடப்பாதமும், மதுரையில் வலப்பாதமும் ஊன்றியாடும் நடன ரகசியமும், சின் முத்திரையாகிய வலம்புரிச் சங்கையும் ஜீவனின் ரகசியமான உயிர்ச் சக்கரத்தையும் ஆசான் அருளால் அறியும் போதே **மகாவிஷ்ணுவும் சிவபெருமானும் ஒன்று** என அறிய முடியும். ஆவிப் பொருளாகிய நாம் இவ் உடலினுள் எந்த



Copyright © AMNA Trust, Chennai

நிலையில் இருக்கிறோம் என்பதை அறிவதே அறிவு. நவக்கிரக கோளரி வாளராகிய ஒரு யதார்த்த தேவகுரு மூலமே அழியாத திருச்சிற்றம்பல பொருளை அறிந்து கல்வி வீடு பதம் காண முடியும். அழியாத மெய்யுடன் சேரும் போதே வாசனை, கேள்வி, இருகண், வாய் எவைக்கும் வல்லமை அளிக்கும் அக்கண்ணை அறிய முடியும் என குருபிரான் அருளியதும், ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## இசை வகுப்புகள்
## தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்

**07-01-2024 ~ ஞாயிற்றுக்கிழமை**

சாலை ஆண்டவர்கள் அருளிய **தாகமும் தணியான் தன்னுயிர் ரறியா…** என்ற **ஞான முறையீடு** ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. **சாலை வாழ் அனந்நர்க்கெல்லாம்…** என்ற **திருப்பஞ்ஞணை எழுச்சி** காப்பு செய்யுள், பாடல்கள் பூபாள ராகத்தில் தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை நிறைவுற்றது.

**28-01-2024 ~ ஞாயிற்றுக்கிழமை**

சாலை ஆண்டவர்கள் அருளிய **பரமனே உருவெடுத்து** என்ற **அமுத கலைக்ஞான போதம்** பாடலுடன் அவை மலர்ந்தது. குருகொண்டல் அவர்களின் வழி காட்டலுடன் பூபாள ராகத்தில் ஆண்டவர்கள் அருளிய பாடல்கள் தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப்பெற்று அவை நிறைவுற்றது.

# குரு வா ஆழ்க! குருவே துணை!

*குரவனால் விரும்பப்பட்டு அவர் உபயோகிக்கும் பாதுகை, ஆசனம், படுக்கை முதலிய எல்லாவற்றையும் னமஸ்கரிக்கவேண்டும். எதனையும் தன் கால்கள் படப் புழங்கலாகாது.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## ஆதி மார்க்க னீதி அவையின் 2024 – ஜனவரி மாதம் னிகழ்வுகள்

**15-01-2024 திங்கட்கிழமை குருபிரான் திருமுன்பாக சிவகாசியில் பொங்கல் திருவிழா சிறப்புடன் கொண்டாடப்பெற்று, அனைவருக்கும் பொங்கல் அமுது வழங்கப்பெற்றது.**





**16-01-2024 செவ்வாய்க்கிழமை, குருபிரான் திருமுன்பாக ஈரோடு பவானியைச் சார்ந்த அங்கத்தினர்களுக்கு காஷாயம் வழங்கப்பெற்றது.**

**23-01-2024 செவ்வாய்கிழமை, சிதம்பரம் நடராஜர் கோயிலுக்கு குருபிரான் தன் அங்கத்தினர்களுடன் விஜயம்.**






Copyright © AMNA Trust, Chennai

**24-01-2024 புதன்கிழமை, குருபிரான் திருமுன்பாக, ஜீவசகோதரர் கோபாலகிருஷ்ணன் - ஸ்ரீதலா திருமணம் சிதம்பரத்தில் இனிதே நடைபெற்றது.**



**24-01-2024 புதன்கிழமை திருநள்ளாறு சனீஸ்வரன் கோயிலுக்கு குருபிரான் தன் அங்கத்தினர்களுடன் விஜயம்.**






Copyright © AMNA Trust, Chennai 

**25-01-2024 வியாழக்கிழமை குருபிரான் திருமுன்பாக தைப்பூசம் சிறப்பு அவை, ஆதி மார்க்க னீதி அவை அலுவலகத்தின் திறந்த வெளி மாடியில் சிறப்புடன் நடைபெற்று, அனைவருக்கும் உணவு வழங்கப்பெற்றது.**






## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **03-03-2024 / சென்னை** | மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்களின் ஆண்டு பூர்த்தி விழா. |



*Copyright © AMNA Trust, Chennai* 

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2024 ஜனவரி மாத நன்கொடை, பொங்கல் விழா பதிவு மற்றும், தைப்பூச விழா பதிவுக்கென குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 95**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai 

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

[***www.amnatrust.org***](http://www.amnatrust.org)

**Contact Us**:

*Email:* [*write2amnatrust@gmail.com*](mailto:write2amnatrust@gmail.com)

*YouTube Channel:* [*https://youtube.com/c/amnatrust/*](https://youtube.com/c/amnatrust/)

*Facebook Page:* [*https://www.facebook.com/amnatrust/*](https://www.facebook.com/amnatrust/)

***பின்குறிப்பு****: இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 31 – Month: February 2024*